*கவனிக்க.- 2023.07.14 ஆந் திகதிய 2341 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) (தமிழ் மொழி மூலம்), பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2343 - 2023 ජූලි මස 28 වැනි සිකුරාදා - 2023.07.28

*2343 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1260 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.**- (i) ஒதுக்கீடு (திருத்தம்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) தேர்தல்கள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) இலங்கை போசணை மருத்துவர்கள் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2023, யூலை மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒகத்து மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒகத்து மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1-B 82475-5,441 (2023/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பொதுச் சேவைகள் ஆணைக்குழு

## பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகையீட்டின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2023

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுத் தரசேவை வகையீட்டின் தரம் III இல் காணப்படும் சட்ட அலுவலர் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை.-** இந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பரீட்சார்த்திகளில் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தகைமையினை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகத் தேர்வு குழாமினால் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வின் பெறுபேற்றின் அடிப்படையில் அதிகூடிய புள்ளியினைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்தி குறித்த வெற்றிடத்தினை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். பொது உளச்சார்பு மதிப்பீட்டு நேர்முகத் தேர்வானது பொதுச் சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படும். (இலக்கம் 06 இனைப் பார்க்கவும்).

நியமனம் வழங்கப்படும் திகதியானது பொதுச் சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **தேவையான தகைமைகள்.-**

(i) கல்விசார்/தொழில்சார் தகைமைகள்
உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் எடுத்திருத்தல் வேண்டும்.

(ii) அனுபவம்

உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பிறகு மூன்று (03) ஆண்டுகள் சட்டத்தரணியாகப் பணியாற்றியுள்ளதுடன் குறைந்தபட்சம் ஒரு செயலில் தொழில்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்;

அல்லது

உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் அரசாங்க நிறுவனத்தில் சட்டப்பூர்வ பதவியில் மூன்று ஆண்டுகளுக்கும் (03) குறையாத அனுபவத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** :அடிப்படைத்தகுதியை நிரூபிக்கும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும். சேவைக் காலத்தின் ஆரம்ப மற்றும் இறுதித் திகதியை தெளிவாகக் குறிக்கும் சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் அறிவிப்பு இல்லாமல் நிராகரிக்கப்படலாம்.

* ஒரு சட்டப் பதவி என்பது, சட்ட ரீதியான பட்டம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகப் பதவி யேற்றிருப்பது ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதியாகும்.

(iii) **உடல் ஆரோக்கியம்.-**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைச் செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **ஏனைய தகைமைகள்.-**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
- விண்ணப்பதாரர்கள் நற் பண்புகளைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்;
- பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **பதவி தொடர்பான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள்.-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அரசாங்கத்தின் எதிர்கால முடிவுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். நீங்கள் ஓய்வூதியத் திட்டம்/ விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அதற்கான பங்களிப்பை நீங்கள் அவ்வப்போது அரசு நிர்ணயித்துள்ளபடி செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 வருட தகைமைகாண் காலத்தினைக் கொண்டுள்ளது. குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 03 ஆண்டுகளுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி முதலாவது வினைத்திறன் தகைமை காண் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆந் திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி, இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னதாக அவர் பதவிக்கு நியமிக்கப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அவர் மற்றைய அரசகரும மொழியில் உரிய சித்தியினைப் பெற்றுக்கொள்வதுடன், அரசகரும மொழி அல்லாத மொழிமூலத்தில் பணிக்கமர்த்தப்படுதல் வேண்டும். குறித்த நியமனம் பெறும் அலுவலர்கள், தகுதிகாண் காலத்தின் போது, அரச கரும மொழிப் புலமையைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்த நியமனமானது பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை சார்ந்த விதிகள், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் ஏனைய திணைக்கள கட்டளைகளுக்கு உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பித்த மொழி மூலமானது பின்னர் எச்சந்தர்ப்பத்திலேனும் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படாது, மேலும், நீங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலமானது நீங்கள் நியமனம் பெற தகுதியுடைய மொழி மூலமாக இருக்கும்.

4. **வயது எல்லை.-** விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரியின் வயதானது 21 இற்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத் திட்டம்.-** 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் அட்டவணை I இன்படி, இந்த பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 (SL - 1-2016) ஆகும்.

6. தகைமையினை மதிப்பீடு செய்யும் நேர்முகத் தேர்வில் பின்வரும் முறையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **25** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட துறையில் முதுகலைமாணி பட்டம். | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து சட்டத்துறையில் முதுகலைப் பட்டதாரி டிப்புளோமா பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்கைகள் நிறுவகத்தில் இருந்து சட்டத்தில் பட்டதாரி டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல் வேண்டும். | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து, | | |
| | • முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம் | 15 | |
| | • இரண்டாம் வகுப்பு மேல் நிலை சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம் | 07 | |
| | • வகுப்பு சித்தியுடனான சட்டத்துறையில் பட்டம் | 05 | |
| | • சாதாரண சித்தியுடனான சட்டத்துறையில் இளமாணிப் பட்டம் | 10 | |
| | (ஈ) சட்டக் கல்லூரி இறுதியாண்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி சட்டக் கல்லூரி இறுதி யாண்டில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி | 05 | |
| | **குறிப்பு** I : சிறப்பு தேர்ச்சியுடனான சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சை 05 புள்ளிகளுக்கு மேல் தேர்ச்சி பெற்றால் மட்டும் வழங்கப்படும். | | |
| | **குறிப்பு** II : அதிகூடிய தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 02 | **மேலதிக அனுபவம்**<br>திறந்த நீதிமன்றத்தில் வழக்குகள் மற்றும் விளக்கக்காட்சிகள் தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல். | | 35 |

| | வழக்கு தாக்கம் செய்தல் (ஒரு வழக்குக்கு) | நீதிமன்றத்தில் ஆஜராகி உண்மைகளை முன்வைப்பதற்கான மதிப்பெண்கள் (ஒரு வழக்குக்கு) |
|---|---|---|
| உச்ச நீதிமன்றம் | 2 | 5 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 2 | 4 |
| உயர் நீதிமன்றம் | 2 | 3 |
| மாவட்ட நீதிமன்றம் | 4 | 5 |
| மாவட்ட நீதிபதி | 2 | 3 |

**குறிப்பு**.- * மேற்கண்ட தகைமைகளை நிரூபிக்க, சம்பந்தப்பட்ட தீர்ப்புகளின் நகல்களையோ அல்லது வழக்கின் கடைசி விசாரணை திகதியின் சான்றிக்கப்பட்ட நகலையோ நேர்முக தேர்வுக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 03 | **மொழி திறன்** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து ஆங்கிலத்தை முக்கியப் பாடமாகக் கொண்டு பட்டம் பெற்ற பட்டதாரியாக இருத்தல் வேண்டும். | 15 | |
| | (ஆ) அங்கீரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய அளவிலான (Moot Court competitions) போட்டிகளில் காட்படப்படும் ஆங்கிலத்தில் புலமைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>தனியாள்<br>(i) முதல் நிலை/சிறந்த தகுதி - 12<br>(ii) இரண்டாம் இடம் -10<br>(iii) மூன்றாம் இடம் /ஏனைய தகைமைகள் -08<br>குழுக்கள்<br>(i) முதல் நிலை/சிறந்த தகுதி - 10<br>(ii) இரண்டாம் இடம் - 08<br>(iii) மூன்றாம் இடம் /ஏனைய தகைமைகள் - 06 | 12 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தில் இருந்து ஆங்கில மொழி அல்லது வேறு ஏதேனும் ஒரு நிறுவனத்தில் ஆங்கில மொழிக்காக பெற்ற டிப்ளோமா NVQ நிலை 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமா. | 10 | |
| | (ஈ) கல்வி பொதுத் தராதர சான்றிதழ் (உயர்நிலை) தேர்வில் (உள்ளூர் அல்லது லண்டன்); ஆங்கில மொழி அல்லது IELTS இல் குறைந்தபட்ச தேர்ச்சி மொத்த புள்ளிகள் 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL-IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேற்பட்டது அல்லது TOEFL-PBT 550 அல்லது அதற்கு மேற்பட்டது. | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இருந்து ஆங்கில மொழி அல்லது ஏனையவற்றில் நிறுவனத்திடமிருந்து ஆங்கிலத்தில் ஒரு மேம்பட்ட சான்றிதழ் NVQ நிலை 4 சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும். | 05 | |
| | **குறிப்பு** : மிக உயர்ந்த தகைமைகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

| தொடர் இலக்கம் | விடயம் | புள்ளிகள் | அதிகூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 04 | **தகவல் தொழில்நுட்பம் /தகவல் தொழில்நுட்ப சட்டம் பற்றிய அறிவு** | | **10** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டப்படிப்புக்கான தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி அறிவியலினை பிரதான பாடமாக கற்றிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து அல்லது இலங்கை சட்டக் கல்லூரி அல்லது ஏனைய அரச அங்கீகாரம் பெற்ற தொழில் முறையிலான நிறுவனம் ஒன்றிலிருந்து தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப சட்டத்தில் டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல். | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இருந்து கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா பெற்றிருத்தல் வேறொரு நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட கணினி அறிவியல் அல்லது தகவல் தொழில்நுடபத்தில் NVQ 5 அல்லது அதற்கு மேற்பட்ட டிப்ளோமாவினைப் பெற்றிருத்தல். | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் அல்லது இலங்கை சட்டக்கல்லூரி அல்லது ஏனைய அரச அங்கீகாரம் பெற்ற தொழில்முறை ஒரு நிறுவனத்தின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் சட்டத்துறையில் படிப்புகள்/ பயிற்சி நகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பிறகு பெறப்பட்ட சான்றிதழ்கள். (அதிகபட்சம் இரண்டு சான்றிதழ்கள் ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |
| | **குறிப்பு** : புள்ளிகள் உயர்ந்த தகைமைகளுக்கு மட்டுமே வழங்கப்படும். | | |
| 05 | **நேர்முகத் தேர்வின் போது காட்டப்படும் திறமைகள்**<br>பதவியின் பங்கை பூர்த்தி செய்ய வேண்டிய விண்ணப்பதாரரின்<br>• வலிமை கேள்விகள் (Strength questions) (02 புள்ளிகள்)<br>• சூழ்நிலை முடிவுகளை எடுக்கும் திறன் (Situational questions) (03 புள்ளிகள்)<br>• திறன் கேள்விகள் (Competency questions) (10 புள்ளிகள்) மதிப்பீடு செய்யப்படும் வினாக்களுக்கு அளிக்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது | | **15** |
| | மொத்தம் | | **100** |

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல்.**- அனைத்து வகையிலும் முறையாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வின்போது அனைத்து சான்றிதழ்களின் மூல மற்றும் முறையாக சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளினைச் சமர்ப்பித்தல் வேண்டும். நேர்முகத் தேர்வின் போது ஒருவரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பின்வரும் அடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(i) ஆட்களினைப் பதிவு செய்யும் ஆட் பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை.**-

(i) விண்ணப்பங்களை “பொது நம்பிக்கைப் பொறுப்பு அலுவலகம், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம், இல. 2, புல்லர்ஸ் லேன், கொழும்பு 07” என்ற முகவரிக்கு 2023.08.27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயாரித்து முதல் பக்கத்தை 01 முதல் 04 வரையிலும், இரண்டாவது பக்கம் 05 முதல் 07 வரையிலும், மூன்றாவது பக்கம் 08 முதல் 09 வரையிலும் தயாரித்து தமது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பம் அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "நிறைவேற்று சேவையின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு / ஆயுதப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி அல்லது அரசு அல்லது மாகாண அரசுப் பணியில் நிரந்தரப் பதவியில் உள்ள இணைந்த மாதாந்த சம்பளம் ரூபா 47,615.00 ஐ அல்லது அதற்கு மேல் பெற்றுக் கொள்ளும் அலுவலரினால் சான்றுரைக்கப்படுதல் வேண்டும்.

(v) ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தாங்கள் பணியாற்றும் திணைக்களத் தலைவரினூடாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் வடிவமைப்பிற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தொலைந்து போன அல்லது தாமதமான விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

9. **தவறான தகவல்களை வழங்குதல்.**- ஆட்சேர்ப்புக்கு முன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவை என கண்டறியப்பட்டால், உங்களது விண்ணப்பமானது இரத்துச் செய்யப்பட்டும் என்பதோடு ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற பொய்யான அல்லது தவறான தகவல்கள் கண்டறியப்பட்டால், உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு பதவி நீக்கம் செய்யப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது பொதுச் சேவைகள் ஆணக்குழுவுக்கு உரித்துடையதாகும்.

11. இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது வேறுபாடு காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்கும்.

12. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பாக அல்லது இந்த ஆட்சேர்ப்புச் செயல்முறையில் ஏதேனும் சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டால், பொதுச் சேவை ஆணைக்குழு எடுக்கும் முடிவுகளே இறுதியானவையாக இருக்கும்.

பொதுச் சேவை ஆணக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
புத்தசாசன, மத மற்றும் கலாசார
அலுவல்கள் அமைச்சு.

2023, யூலை 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகைமீட்டின் தரம் III இனைச் சேர்ந்த சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2023**

[ ]

(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)
(விண்ணப்பிக்கும் மொழிக்குரிய இலக்கத்தை கூட்டில் இடவும். சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4) [ ]
குறிப்பு : விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றம் செய்ய முடியாது.

---

1.0

1.1 முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) :..........................................................................................
(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................................
1.2 முழுப் பெயர் :..........................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ..........................................................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./திருமதி/செல்வி) ................................................................
(சிங்களத்தில்/தமிழில்) ................................................................
உதாரணம் : எம். ஜீ. எஸ். பி. கே. குணவர்தன

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் : ................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ................................................................

2.0

2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ................................................................
................................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ................................................................
................................................................

3.0

3.1 பால் நிலை : பெண் - 1, ஆண் - 0
(உரிய இலக்கத்தினைக் கூட்டில் இடவும்) ☐

3.2 குடியியல் நிலை : விவாகமானவர் - 1, விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டில் இடவும்) ☐

3.3 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.4 2023.08.27 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

3.5 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 தொலைபேசி இல. : நிலையான இல. ☐☐☐☐☐☐☐☐☐☐

கைடயக்க இல. ☐☐☐☐☐☐☐☐☐☐

5.0

5.1 நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கான விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்டவாறான தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| தகைமையினைப் பெற்ற நிறுவனம் | பெற்ற திகதி |
|---|---|
| ........................................................ | .................................. |
| ........................................................ | .................................. |

* உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட திகதி :....................................................

* அடிப்படைத் தகைமைகளினை நிரூபிக்கும் சான்றிதழ்கள்/ ஆவணங்கள் விண்ணப்பதாரியினால் சான்றுப் படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலின் இலக்கம் 06 இன் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு தகைமைகள் பற்றிய விபரங்கள் :

5.2 மேலதிக கல்வித் தகைமைகள் :................................................................
................................................................

5.3 மேலதிக தொழில்சார் அனுபவம் :................................................................
................................................................

5.4 தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு :................................................................
................................................................

5.5 மொழி ஆற்றல் :................................................................

* மேலதிக தகைமைகளை நிரூபிக்கும் ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்பிவைக்க வேண்டிய அவசியமில்லை நேர்முகத் தேர்வின் போது அத்தகைய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்திருப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

6.0 நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தண்டிக்கப்பட்டுள்ளீர்களா?

(உரிய கூட்டினுள் (✓) இடுக.) (ஆம் எனில் விபரிக்கவும்.)

| இல்லை | | | ஆம் | |
|---|---|---|---|---|

.............................................................................................................................................................

7.0 இவ் விண்ணப்பப்படிவத்தில் நான் வழங்கிய அனைத்துத் தகவல்களும் உண்மையானவையும் சரியானவையும் என்பதையும், விண்ணப்பப் படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும், நான் வழங்கிய இத்தகைய தகவல்கள் தவறானவை என நியமனம் செய்யப்படுவதற்கு முன் கண்டறியப்பட்டால், நான் தகைமையற்றவனாவேன் என்றும் நியமனத்தின் பின்னர் கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நானறிவேன் என்றும் சகல ஒழுங்குவிதிகளுக்கும் நான் கட்டுப்படுவேன் என்றும் இத்தால் உறுதியளிக்கின்றேன்.

...........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :......................

8.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல் :

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

...........................
கையொப்பத்தினை சான்றுப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி :......................

முழுப்பெயர் :...............................
பதவிப் பெயர் :...............................
திகதி :...................................
(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்.)

9.0 **திணைக்களத் தலைவரின் பரிந்துரை :-**
மேற்குறித்த விவரங்களை வழங்கியுள்ள திரு./ திருமதி/ செல்வி ................................ இந்த நிறுவனத்தில் பணியாற்றுகின்றார் என்றும், அவர் வழங்கிய தகவல்கள் சரியானவை என்றும், அவரின் கடமை மற்றும் வருகை என்பன திருப்திகரமாக உள்ளன என்றும், அவர் மீது எவ்வித குற்றச்சாட்டும் இல்லை என்றும், இந்த பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் எனவும் நான் சான்றளிக்கிறேன்.

...........................
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பம்.

பெயர் :...............................
பதவிப் பெயர் :...............................
முகவரி :...................................
திகதி :......................
(உத்தியோகபூர்வ இலச்சினையினை இடவும்)

07-372

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத – (தொகுதி-2) III ஆம் தரத்தின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பான I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2022

01. மேற்குறிப்பிட்ட பதவிக்குரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்யும் நடைமுறை விதிகளுக்கு அமைவாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2023 நவம்பர் மாதம் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. I. இந்த பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதோடு, பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக அவரால் தெரிவிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவார்கள்.

II. பரீட்சை தேர்வுக்கான விதிகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இந்த விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் அபராதத்திற்கு அவர்கள் உட்படுவார்கள்.

III. இந்த பரீட்சை தொடர்பாக கல்வி அமைச்சின் கீழ் நியமனம் பெற்ற விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

03. ***பரீட்சைக் கட்டணங்கள்.-***

*இந்த வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை தொடர்பாக முதன் முறையாக தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணங்கள் அறவிடப்பட மாட்டாது அதன் பின்னர் முழுப்பரீட்சைக்கும் தோற்றுவதாக இருந்தால் ரூ. 500.00 பரீட்சைக் கட்டணமும் அதில் ஒரு பாடத்திற்கு மாத்திரம் தோற்றுவதாக இருந்தால் ரூ. 200.00 பரீட்சைக் கட்டணமும், இரண்டு பாடங்களுக்கு தோற்றுவதாக இருந்தால் ரூ. 400.00 பரீட்சைக் கட்டணமும் வசூலிக்கப்படும். இந்த பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செலவினத் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் வரவு வைக்கும்படி நாட்டின் எந்தவொரு தபால் /உப தபால் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறிப்பிட்ட இடத்தில் கழறாவண்ணம் ஒரு நிரலில் ஒட்டப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எவ்வித காரணத்தினாலும் மீள செலுத்தப்பட அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.*

04. ***விண்ணப்பப்படிவங்கள்.-***

*விண்ணப்பப்படிவம் இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைவானதாக இருத்தல் வேண்டும். அந்த மாதிரிப் படிவத்தின்படி, A 4 அளவிலான தாளில் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டியதுடன், தலைப்பு இல. 01 முதல் 06 வரை முதலாம் பக்கத்திலும், எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் இருக்கும்படி தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர், சிங்கள மொழிமூல விண்ணபங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழிமூலத்திலும், தமிழ் மொழிமூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழிமூலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும். விண்ணப்பங்கள் தட்டச்சு மூலமாக தயாரிக்கப்படலாம். என்றாலும், அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சாத்தியினால் தமது வலயக் கல்விப் பணிப்பாளர் /பீடாதிபதி/ திணைக்களத் தலைவர் ஊடாக 2023 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் படி "பரீட்சை ஆணையாளர் நாயகம்" பரீட்சை ஒழுங்குபடுத்தும் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.*

*முழுமையற்ற தகவல்களுடன் கூடிய விண்ணப்பங்கள் மறு அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை தொடர்பான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கிணைவானதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரிகள் சரிபார்க்க வேண்டும். இல்லையெனில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு*

05. *பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் அவர்கள் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பில் மண்டப அதிகாரி திருப்தி பெறும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.*

1. *தேசிய அடையாள அட்டை ;*
2. *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;*
3. *செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.*

*அத்துடன் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும். விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைவதை தடுக்கலாம். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் பரீட்சைக்குத் தோற்றி முடிவின் பின்னர் வெளியேறும் வரை முகங்கள் மற்றும் காதுகளை மூடுவது தவிர்க்கப்பட வேண்டும்.*

06. *வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என கருதி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்தன்று அல்லது அதற்கு முன்னதாக குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் முன்னிலைப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இணையவழி முறையாக மாத்திரம் பரீட்சை அனுமதி பத்திரங்கள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களினால் பரீட்சை மண்டப அதிகாரிக்கு அவர்களின் ஒப்பத்தை உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறான அனுமதி பத்திரம் இல்லாமல் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் விநியோகித்த பின்னர் உடனடியாக அது தொடர்பாக குறிப்பிட்ட அறிவித்தல் ஒன்று பத்திரிகைகளில் மற்றும்/அல்லது இலங்கை பரீட்சைத்திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில்*

பிரசுரிக்கப்படும். அனுமதிப் பத்திரத்தை பதிவிறக்கம் செய்ய முடியாவிட்டால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள படி அது குறித்து பரீட்சைத் திணைக்களத்தில் வினவப்பட வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிப்பவர் எனில் அவ்விடயங்களுடன், பெக்ஸ் மூலமாக பரீட்சை அனுமதி பத்திரத்தின் பிரதி ஒன்றை விரைவாக பெற்றுக்கொள்ளும் வகையில் விண்ணப்பதாரரின் பெக்ஸ் இலக்கம் குறிப்பிடப்பட்ட கடிதம் அறிவித்தலில் காணப்படும் பெக்ஸ் இலக்கத்திற்கு முன்னிலைப்படுத்துவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தம்மிடம் உள்ள விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்துவதற்கு தேவையெனில் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பத்தை தபாலிடும் போது பதிவுசெய்யப்பட்ட ரசீதை தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

07. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அனுமதி பத்திரங்களைக் கொண்ட உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் விதத்தில் திணைக்களத் தலைவர்களினால் கடமை விடுப்பு வழங்கப்படவேண்டும். பயணச் செலவுகள் வழங்கப்படமாட்டாது

08. பரீட்சை நடைபெறுவது சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் மாத்திரமே ஆகும். தாம் கல்வி கற்ற மொழிமூலத்தில் அல்லது அரசகரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம் என்பதுடன், தோற்றும் ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு மொழிமூலத்திலேயே பதில் வழங்க வேண்டும். தாம் விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது. இந்த பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

09. விண்ணப்பப்படிவத்திலும், பரீட்சைக்குரிய அனுமதி பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரி ஒருவர் தனது ஒப்பத்தை தாபனத் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரி ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் முதல் திகதியிலேயே பரீட்சை மண்டப அதிகாரிக்கு தமது ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி பத்திரத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்.

10. பரீட்சை நடைமுறை மேற்படி பதவிக்குரிய பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டதாகும்

| பாடம் | விடைய எண் | புள்ளிகள் | நேரம் | குறைந்த பட்ச தேர்ச்சி புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. அலுவலக முறை | 01 | 100 | மணி1 | 40 |
| 02. நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அடிப்படை அறிவு | 02 | 100 | மணி1 | 40 |
| 03. பாட அறிவு | 03 | 100 | மணி 1 1/2 | 40 |

(01) அலுவலக முறை அறிவு (கட்டமைக்கப்பட்ட கட்டுரை கேள்விகள் அடங்கிய வினாத்தாளாகும்)

அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறை தொடர்பான அடிப்படை அறிவு

- அலுவலக முறை தொடர்பாக கோட்பாடுகள்
- அலுவலக முறை தொடர்பாக கோட்பாடுகளின் முக்கியத்துவம்
- அலுவலக முறையினை பயன்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு
- கோவை பரிமாற்றல்

(02) நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அடிப்படை அறிவு (கட்டமைக்கப்பட்ட கட்டுரை கேள்விகள் அடங்கிய வினாப் படிவமாகும்)

அரச அலுவலகங்களில் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அடிப்படை அறிவு

நிதி ஒழுங்குவிதிகளின் I, II ,III, IV, V ஆம் அத்தியாயங்களின் கீழ் ஒருங்கிணைந்த நிதி, வருடாந்த செலவின மதிப்பீடு வருமான மதிப்பீடுகளின் படி செலவு செய்யும் அதிகாரம் மற்றும் செலவு கட்டுப்பாடு தொடர்பான அறிவு, நிதி நிர்வாகம் மற்றும் கணக்குகளின் கொடுக்கள் வாங்கள் தொடர்பான பொதுவான புரிதல்

(03) பாட அறிவு

- தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகள்
- விளையாட்டு பயற்சித் திட்டங்கள்
- பாடசாலை விளையாட்டு சுற்றுநிருபங்கள்
- விளையாட்டு மைதானங்கள் மற்றும் உபகரணங்கள்
- முதலுதவி

- விளையாட்டு சட்டதிட்டங்கள் மற்றும் போட்டி குறிப்புகள்
- விளையாட்டு கோட்பாடுகள்
- தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தூண்டுதல்கள்
- விளையாட்டு போஷாக்கு

(மேற்படி பாடத்துறை தொடர்பான அடிப்படை அறிவு)

11. பரீட்சாத்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளார் என கருதப்படக் கூடாது

12. இந்த பரீட்சை அறிவித்தலின் மூலமாக ஏற்பாடு செய்யப்படாத எந்த விடயங்கள் தொடர்பாகவும் கல்வி அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதி முடிவாகும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி மூலங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தபாடின்மை நிலவுமெனில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல,
2023, ஏப்பிறல் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாது - (தொகுதி-2) III ஆம் தரத்தின் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பான 1 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2022**

**1st Efficiency Bar Examination for the Sports Trainers of Grade III Management Assistant – Non - Technical Service (Segment 2) in the Ministry of Education – 2022**

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
உரிய இலக்கத்தை கட்டத்திற்குள் குறிப்பிடவும் ☐

☐ (அலுவலக உபயோகத்திற்கு மட்டுமே)

சிங்களம் - 2
தமிழ் - 3

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ........................................................................................................
........................................................................................................................................
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னரும் குறிப்பிடப்பட்ட பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):........................................................................................................
(உதா: GUNAWARDHANA H.M.S.K.)

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) : ........................................................................................................
........................................................................................................................................

02. சேவை நிலையத்தின் முகவரி :

2.1 சேவை நிலையத்தின பெயர் : ........................................................................................................

2.2 அலுவலக முகவரி : ........................................................................................................

2.3 அலுவலக முகவரியின் தபால் நகரம் : ........................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (இந்த முகவரிக்கு அனுமதிப் பத்திரம் தபாலிடப்படும்)

03. பால் நிலை :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கட்டத்திற்குள் குறிப்பிடவும்)

04. கையடக்க தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

06. தற்போது வகிக்கும் பதவி (நியமனக் கடிதத்தின் படி): ...........................................................................................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

6.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :.............................................................................................................

6.2 நியமனத் திகதி :..................................................................................................................................

07. நீங்கள் பங்கேற்கும் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடம்/பாடங்கள்
(வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆம் பந்தியை பார்க்கவும்.)

| தொடர் எண் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |

08. பரீட்சைக் கட்டணம் (தேவைப்படுமாயின்)
I. செலுத்தப்பட்ட தொகை : ரூ
II. செலுத்திய தபால் அலுவலகம் :
III. பற்றுச்சீட்டு இலக்கம் :

| |
|---|
| பற்றுச்சீட்டின் ஒரு நிரலை இங்கு ஒட்டவும் (தேவைப்படுமாயின்)<br>(பற்றுச்சீட்டின் ஒரு போட்டோ பிரதியை அருகில் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும் |

09. விண்ணப்பதாரரின் அறிக்கை :

மேற்படி விடயங்கள் சரியானதெனவும், மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிமை உள்ளதெனவும் அறிவிப்பதுடன், இந்த பரீட்சை நடாத்துவது தொடர்பில் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உடந்தையாவேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :.......................................

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்கு பதிலாக ஒப்பமிடும் அதிகாரத்தை பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் முன்னிலையில் விண்ணப்பதாரரினால் கையொப்பமிடப்படல் வேண்டும்.

10. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

எனது அலுவலகத்தில்/பாடசாலையில்/கல்வியியற் கல்லூரியில்/ஆசிரிய கலாசாலையில்/ஆசிரிய நிலையத்தில் அதிகார மற்றும் தனிப்பட்ட முறையில் எனக்கு தெரிந்த திரு./திருமதி/ செல்வி.................................... எனது முன்னிலையில்

கையொப்பமிட்டதாகவும், குறிப்பிட்ட பரீட்சைக்கட்டணத்திலிருந்து விடப்பட்டதாகவும் / பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை ஒட்டப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம் மற்றும் பதவிமுத்திரை
(அருகில் உள்ள பதவிநிலை
உத்தியோகத்தர் /அதிபர்)

பெயர் : ..................................................................................................................................
பதவி நிலை : ..................................................................................................................................
முகவரி : ..................................................................................................................................
திகதி : ..................................................................................................................................

11. **திணைக்களத் தலைவரின் உறுதிமொழி** :

1. மேற்படி விடயங்களை பரீட்சித்து பார்த்ததாகவும்,
2. அலுவலர் இந்த பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளை கொண்டிருப்பதாகவும்,
3. அலுவலர் இந்த பரீட்சைக்குத் தோற்றும் முதலாவது தடவை என்பதால் பரீட்சைக் கட்டணத்தில் விடுவிக்கப்பட்டுள்ளதாக / குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்திப் பற்றுச்சீட்டை ஒட்டியிருப்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................
திணைக்களத் தலைவரின்/வலயக்
கல்விப் பணிப்பாளரின்/
பீடாதிபதியின் கையொப்பம் மற்றும்
பதவிமுத்திரை

பெயர் : ..................................................................................................................................
பதவி நிலை : ..................................................................................................................................
முகவரி : ..................................................................................................................................
திகதி : ..................................................................................................................................

(தேவையற்ற வார்த்தைகளை வெட்டிவிடவும் )

07-405

---

## சட்டவரைஞர் திணைக்களம்

### சட்டவரைஞர் திணைக்களத்தில் வெளிக்கள / அலுவலக அடிப்படையிலான அலுவலர் பிரிவு I சேவை வகுதியின் மொழிபெயர்ப்பாளர் (தரம் II) பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

சட்டவரைஞர் திணைக்களத்தில் ஆங்கிலம் / சிங்கள மொழிபெயர்ப்பாளர் (தரம் II) பதவிகளிலான 08 வெற்றிடங்களையும் ஆங்கிலம் / தமிழ் மொழிபெயர்ப்பாளர் (தரம் II) பதவிகளிலான 08 வெற்றிடங்களையும் நிரப்புவதற்குத் தகைமைபெற்ற ஆளணியினரைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப்பரீட்சைக்காகத் தகவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் 2023, நவெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும். சட்டவரைஞரின் அங்கீகாரத்தின் மேல் இப்பரீட்சையைப் பிற்போடலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(அ) விண்ணப்பங்களைப் பெறுவதற்கான முடிவுத் திகதி 2023, ஓகத்து 25 ஆகும்.

**குறிப்பு**: விண்ணப்பமொன்று அல்லது தொடர்புபட்ட ஆவணம் அஞ்சலில் தொலைந்து போனமை அல்லது தாமதப் பட்டமை பற்றிய ஏதேனும் முறைப்பாடு கவனத்துட்கொள்ளப்படமாட்டாது.

01. **தொழில் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

i. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். நீர் உரித்துடையவராகவுள்ள ஓய்வூதியத்திட்டத்தின்மீது அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட ஒரு கொள்கை முடிபுக்கு நீர் அமைந்தவராக இருத்தல் வேண்டும். விதவைகள் மற்றும் அநாதைகள்/ விதுரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்துக்கு உதவுதொகைகள் செய்யப்படுதல் வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் தேவைப்படக்கூடியவாறாக அதற்கான உதவுதொகைகளை நீர் செலுத்துதல் வேண்டும்.

ii. 2020.10.16 ஆந்திகதிய 18/2020 ஆம் இலக்க, பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி மற்றைய அரச கருமமொழியிலான/அரசகருமமொழிகளிலான தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

iii. இந்நியமனம், பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறைசார் விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்க நிதிசார் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டவரைஞர் திணைக்களத்தில் கள அல்லது வெளிக்கள அலுவலக அடிப்படையிலான அலுவலர் பிரிவு I சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை அத்துடன் அதற்குச் செய்யப்பட்டுள்ள மற்றும் செய்யப்படும் திருத்தங்களில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றுக்கு அமைந்ததாக உள்ளது.

iv. ஆட்சேர்ப்புக்காக நீர் தகவுடையவராகவுள்ள மொழிமூலமானது, விண்ணப்பப் படிவத்தில் உம்மால் குறிப்பிடப்பட்ட மொழிமூலமாகவிருக்கும்.

02. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவியானது பொதுநிருவாகச் சுற்றறிக்கை இல 06/2016 இன் நியதிகளின்பிரகாரம் (MN6 -2016) ரூபா 36,585-10×660 - 11×755-15×930-65,440.00 எனும் மாதாந்த சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டுள்ளது.

03. **தகைமைகள்.**-

3.1 கல்விசார் / உயர்தொழிற்சார் தகைமைகளாவன:-

i. (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) சட்டத்தரணிகளுக்கான இறுதிப் பரீட்சையில் சித்திபெற்று இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்; என்பதுடன் சேர்த்து

ii. விண்ணப்பிக்கும் பதவி தொடர்பில் சிங்கள / தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் சேர்த்து கல்விப் பொதுத் தராதர (சாதாரணத்தரப்) பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியை அல்லது (நியமிக்கும் அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட) ஆங்கில மொழியில் உயரிய தகைமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.2 **உடற் தகைமைகள்:**
ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் ஏதேனும் பாகத்தில் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல்ரீதியிலும் உளரீதியிலும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

3.3 **ஏனைய தகைமைகள்:**

i. விண்ணப்பகாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பகாரர்கள் மிகச்சிறந்த பண்புக்கூறைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பங்களைப் பெறுவதற்கான திகதியாகவுள்ள 2023, ஓகத்து மாதம் 25 எனும் முடிவுத்திகதியில், பதவிக்கு நியமிக்கப்படுவதற்காகத் தேவைப்படும் எல்லாத் தகைமைகளையும் திருப்திப்படுத்தல் வேண்டும்.
iv. விண்ணப்பகாரர்கள் இலங்கைச் சட்டங்களின்கீழ் ஏதேனும் குற்றவியல் சார்த்துகைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டிருத்தலாகாது.

04. **வயதெல்லை:** விண்ணப்பகாரர்கள் விண்ணப்பங்கள் பெறப்பட்ட கடைசித் திகதியன்றுள்ளவாறு வயதானது 21 ஆண்டுகளுக்குக் குறையாமலும் 35 ஆண்டுகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (பகிரங்க சேவையில் நிரந்தரப் பதவியை ஏற்கனவே வகிக்கின்றவர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்புடைமையாகாது).

05. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துப் பரீட்சைகளின் பெறுபேறுகளின்மீது ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் இரு வினாத்தாள்களிலும் சித்திபெற்றவர்களின் விண்ணப்பகாரர்களுக்கிடையேயிருந்து ஆட்சேர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட விண்ணப்பகாரர்களின் எண்ணிக்கைக்குச் சமானான விண்ணப்பகாரர்களின் எண்ணிக்கையினர் இருவினாத்தாள்களுக்குப் பெற்றுக்கொண்ட கூட்டு மொத்தப் புள்ளிகளுக்கிணங்க திறன்களின் தொடர்வரிசையில் பொது – நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

06. **பாடவிதானம்**.-

6.1 **எழுத்துப்பரீட்சை**.-

சட்டவரைஞர் திணைக்களத்தில் (ஆங்கிலம் / சிங்கள) மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் (ஆங்கிலம் / தமிழ்) மொழிபெயர்ப்பாளர்கள் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பின்வரும் இரண்டு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது –

(01) மொழிபெயர்ப்புத் தேர்ச்சி - 100 புள்ளிகள் - நேரம் 03 மணித்தியாலங்கள்
(02) மொழித்தேர்ச்சி – 100 புள்ளிகள் - நேரம் 03 மணித்தியாலங்கள்

| வினாத்தாளின் பெயர் | பாடவிதானம் | சித்திக்கான குறைந்தபட்சப் புள்ளிகள் |
|---|---|---|
| 1. மொழிபெயர்ப்புத் தேர்ச்சி | i. பாராளுமன்றச் சட்டமொன்றின் ஒரு பகுதியை ஆங்கில மொழியிலிருந்து சிங்கள/தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்தல்.<br>ii. ஆங்கில மொழியிலுள்ள சட்டமொன்றின் பாகத்தை அதன் பிழையான சிங்கள / தமிழ் மொழிபெயர்ப்புடன் ஒப்பிடுதலும் மற்றும் சிங்கள / தமிழ் மொழிபெயர்ப்பை சரியான முறையில் மீளாய்வு செய்தலும். | 40% |
| 2. மொழித் தேர்ச்சி<br>பாகம் I<br>சிங்கள / தமிழ் மொழியிலான அறிவு. | சுருக்கமும், எழுத்தாக்கமும் மற்றும் சொற்களின் சரியான பொருளை வெளிக்காட்டும் அத்தகைய முறையில் வசனங்களை அமைத்தலும். | 40% |
| பாகம் II<br>ஆங்கில மொழி யிலான அறிவு | சுருக்கமும், எழுத்தாக்கமும் மற்றும் சொற்களின் சரியான பொருளை வெளிக்காட்டும் அத்தகைய முறையில் வசனங்களை அமைத்தலும் | |
| இயைபான இரு அரசகரும மொழிகளுள் ஒன்றுக்கும் (சிங்கள / தமிழ் மொழி) மற்றும் ஆங்கிலமொழி வினாத்தாள்களுக்கும் பரீட்சாத்திகள் தோற்றுதல் வேண்டும். | | |

6.2 **பொது நேர்முகப்பரீட்சை**:

தகைமைகளையும் உடற்றகுதியையும் மதிப்பிடுதல் (புள்ளிகள் அளிக்கப்படமாட்டாது)

07. **விண்ணப்பிக்கும் முறை**.-

7.1 விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பத்தை இவ்வறிவித்தலின் முடிவில் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கிணங்க அவர்/அவள் பரீட்சைக்குத் தோற்றும் அதேமொழியில் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் ஒவ்வொரு பிரிவும் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் விண்ணப்பகாரரினால் நிரப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் எவையேனும் பிரிவுகள் அவருக்கு / அவளுக்கு ஏற்புடையனவல்லாவிடின், "ஏற்புடையனவல்ல" என அவை அடையாளமிடப்படுதலும் வேண்டும். வரிசைகள் வெற்றாகவிடப்படின், விண்ணப்பம் நிராகரிக்கப்படலாமென்பதைக் கவனிக்கவும். மாதிரி விண்ணப்பமானது, 21x29.7 செ.மீ அளவினதான A4 தாளின் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(அ) 01 முதல் 07 வரையிலான இலக்கங்களைக்கொண்ட தலைப்புக்கள் முதலாவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) 08 முதல் 13 வரையிலான இலக்கங்களைக்கொண்ட தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்;

(இ) 14 முதல் 16 (I) வரையிலான இலக்கங்களைக்கொண்ட தலைப்புக்கள் மூன்றாவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் ஏனைய இலக்கங்களைக்கொண்ட தலைப்புக்கள் நான்காவது பக்கத்தில் தோன்றும்படி தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகவும் இருக்கும்.

7.2 நிரப்பப்பட்ட விண்ணப்பம் இப்பரீட்சை பற்றிய அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்துடன் இணங்கியொழுகுகின்றதாவென்பதை விண்ணப்பகாரர் செவ்வைபார்த்தல் வேண்டும் என்பதுடன் மாதிரி விண்ணப்பத்திற்கிணங்காத அல்லது முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கவும்படும்.

**விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்**

7.3 முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பம் 2023 ஓகத்து 25 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல, என்ற முகவரிக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். "சட்டவரைஞர் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2023" என்பது கடிதவுறையின் மேல் இடதுபக்க மூலையில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். மேலும், தமிழ்மொழியிலான விண்ணப்பங்களில் பரீட்சையின் பெயர், தமிழ்மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலமொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

7.4 தற்போது பகிரங்க சேவையில் அல்லது மாகாணப் பகிரங்க சேவையில் சேவையாற்றுகின்ற அலுவலர்கள், தத்தமது திணைக்களத்தலைவர்களினூடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பெறப்பட்டமை ஒப்புக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், முடிவுத்திகதிக்குப்பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் ஏதேனும் அறிவித்தலின்றி நிராகரிக்கவும்படும்.

பரீட்சைக் கட்டணம்

7.5 பரீட்சைக் கட்டணம் 600.00 ரூபாவாகும். பரீட்சைக்கட்டணம் 20-03-02-13 ஆம் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் அரசிறை உரித்தின்கீழ் அரசாங்க வருமானத்துக்கு வரவுவைக்கப்படுவதற்கு தீவிலுள்ள ஏதேனும் தபால் நிலையத்துக்கு, உபதபால் நிலையத்துக்கு அல்லது மாவட்ட பிரதேச செயலகத்துக்குச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பகாரரின் பெயரில் பெற்றுகொள்ளப்பட்ட கொடுப்பனவுப் பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பத்தில் குறித்த இடத்தில் அதன் ஓரங்களின் ஒன்றில் ஒட்டப்படுதலும் வேண்டும். அப்போது அது விலகிச்செல்லமாட்டாது. சொல்லப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை வைத்திருத்தல் பயனுள்ளதாகவிருக்கும். பணக்கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ பரீட்சைக் கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.6 எச்சூழ்நிலையின்கீழும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

08. **அனுமதி**.-

8.1 பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதி உரிய முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை இவ்வறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பெறுவதற்கான முடிவுத்திகதியன்று அனுப்பிய வர்களான பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன், பரீட்சைகள் திணைக்களம் இது தொடர்பில் செய்தித்தாள்களில் அறிவித்தலொன்றை வெளியிடும்.

8.2 அத்தகைய அறிவித்தல் வெளியீட்டிலிருந்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டையொன்று கிடைக்காத எவரேனும் பரீட்சார்த்தி இருப்பாராயின், அத்தகைய நிகழ்வு பரீட்சைகள் திணைக்களத்துக்கு பரீட்சார்த்தியின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயருடனும் சேர்த்து அறிவிக்கப்படுதல் வேண்டும். பரீட்சார்த்தி கொழும்புக்கு வெளியேயுள்ளவொரு பிரதேசத்திலிருப்பவராயின், அனுமதி அட்டையின் பிரதியொன்று அனுப்பப்படக்கூடிய தொலைநகல்

இலக்கத்தைக் கொண்டிருக்கவேண்டிய கோரிக்கைக் கடிதத்துடன் சேர்த்து, அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொலைநகல் இலக்கத்துடன் தொடர்புகொண்டு விசாரணைகளைச் செய்தல் பயனுள்ளதாகவிருக்கும். எவையேனும் தகவல்களை எண்பிக்கும்படி பரீட்சைகள் திணைக்களத்தினால் கோரப்படின், அவ்வாறு செய்வதற்கென உரியமுறையில் நிரப்பப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்டதற்குஎண்பிப்பானபற்றுச்சீட்டின்பிரதியையும்,பதிவஞ்சல்மூலம்விண்ணப்பத்தைஅனுப்பும்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும் உம்மிடம் வைத்திருத்தல் மிகவும் பயனுள்ளதாகவிருக்கும்.

8.3 ஒரு பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டையொன்றை வழங்குதல், அவர் அல்லது அவள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகவுடைமைக்கான ஓர் ஒப்புக்கொள்ளுதலாகக் கருதப்படுதலாகாது.

**பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவதற்கான அத்தாட்சிப்படுத்துகையைப் பெற்றுக்கொள்ளுதல்**

8.4 ஒவ்வொரு விண்ணப்பகாரரும், பரீட்சைக்குத் தோற்றுவதற்குமுன்னர் அவரின் / அவளின் கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகையைப்பெற்றுக்கொள்வது கட்டாயமானது.ஒரு அரசாங்க நிறுவனத்தினூடாகப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பகாரரொருவர் அவர் தற்போது சேவையாற்றுகின்ற நிறுவனத்தின் தலைவரின்மூலம் அவரது / அவளது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும். ஏனைய விண்ணப்பகாரர்கள் ஓர் அரசாங்கப் பாடசாலையின் அதிபர் / ஓய்வுபெற்ற அதிபர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதிவான், ஒரு சத்திய ஆணையாளர், ஒரு சட்டத்தரணி, ஒரு பிரசித்த நொத்தாரிசு, மூன்று ஆயுதந்தாங்கிய படைகளினதும் ஓர் ஆணைபெற்ற அலுவலர் அல்லது பகிரங்க சேவையிலுள்ள அல்லது உள்ளூராட்சி சேவையிலுள்ள அலுவலர் அல்லது ஒரு நிரந்தரமான பதவிநிலை அலுவலர் அல்லது ஒரு பௌத்த கோயிலின் பொறுப்பான மதகுரு அல்லது பிரதான மதகுரு அல்லது வேறேதேனும் மதத்தின் வழிபாட்டிற்கு பொறுப்பாகவுள்ள ஆள் என்போர்மூலம் தமது கையொப்பங்களை அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும்.

**பரீட்சைக்கு அனுமதித்தல்**

8.5 பரீட்சார்த்தி, இயைபான பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சையின் முதலாவது நாளன்று, பரீட்சார்த்தி, அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதியைப் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அளித்தல் வேண்டும். இதற்கமைந்தொழுகாத பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

8.6 பரீட்சார்த்திகள், பரீட்சையை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தோராவர். அவர்/அவள், சொல்லப்பட்ட சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் மீறப்படின், பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட ஒரு தண்டத்துக்கு உட்படுத்தப்படலாம்.

**பரீட்சார்த்தியின் தகவலுக்காக**:

(அ) ஏதேனும் ஆவணம் அல்லது அதன் ஏதேனும் பிரதி விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதலாகாது.
(ஆ) நேர்முகப் பரீட்சையில் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்துட்கொள்ளப்படமாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**: ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமது ஆளடையாளத்தைப் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்திப்படும்வகையில்எண்பித்தல்வேண்டும்.பின்வரும்ஆவணங்களில்ஏதேனும்ஒன்று அந்நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியான இலங்கையின் சாரதி உரிமம்.

பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிலைநாட்டும்பொருட்டு அவர்களுடைய முகத்தை மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் கட்டாயமானதாகும். தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை அதிகாரிகள் அவரை அடையாளம் காண்பதற்காக பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடியும் வரையும் அதனை விட்டுச் செல்லும் வரையும் முகம் மற்றும் காதுகளை மூடாமல் இருத்தல் வேண்டும்.

10. **பொய்யான தகவலைக் கொடுத்துதவுதல்:**

10.1 பரீட்சார்த்திக்கு தகைமையற்றவராகவிருப்பதாகக் கண்டுபிடிக்கப்படின், பரீட்சைக்கு முன்னரோ, அல்லது பரீட்சை நடாத்தப்படுகின்றபோதோ, அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்நேரத்திலேனும் கண்டுபிடிக்கப்படின், அவரது/அவளது பரீட்சார்த்த உரிமையானது இல்லாதாக்கப்படும்.

10.2 பரீட்சார்த்தியொருவர், பொய்யானதென அறிந்திருந்து ஏதேனும் தகவலை வழங்கியுள்ளமை அல்லது அவர்/அவள் வேண்டுமென்று ஏதேனும் முக்கியமான தகவலை மறைத்திருந்தமை வெளியாகினால், அவர்/அவள் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. இவ்வறிவித்தலில் வழங்கப்படாத ஏதேனும் கருமம் தொடர்பாக முடிபுகளைச் செய்வதற்கான உரிமையை சட்டவரைஞர் கொண்டுள்ளார்.

12. இவ் வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

13. இங்கு குறிப்பிடப்பட்ட சில அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதுவிடுவதற்கான உரிமையை சட்டவரைஞர் கொண்டுள்ளார்.

தில்ருக்ஷி சமரவீர,
சட்டவரைஞர்.

சட்டவரைஞர் திணைக்களம்,
இல. 80, அதிகரண மாவத்தை,
கொழும்பு 12,
2023, யூலை 28.

மாதிரி விண்ணப்பப் படிவம்

சட்டவரைஞர் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளர் பதவிகளிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை- 2023

01. விண்ணப்பிக்கும் பதவி ☐

ஆங்கிலம் / சிங்களம் மொழிபெயர்ப்பாளர் - 1
ஆங்கிலம் / தமிழ் மொழிபெயர்ப்பாளர் - 2
(இயைபான இலக்கத்தை கூட்டில் எழுதவும்)

02. பரீட்சைக்கு தோற்றுகின்ற மொழி : ☐

சிங்களம் - 2 தமிழ் - 3 ஆங்கிலம் - 4
(இயைபான இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

03. முடிவில் முதலெழுத்துக்களுடன் பெயர்:

I. ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்:
(உ.ம்: GUNAWARDHANA, M.G.B.S.K)
II. சிங்களத்தில்/தமிழில்:……………………………………………………………..

04. முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டப்பட்ட பெயர்:

I. ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்: ………………………………………………
II. சிங்களத்தில்/தமிழில் : …………………………………………………………

05. அனுமதி அட்டை / தகவுடைமை மதிப்பீட்டுக்கான நேர்முகப்பரீட்சைக் கடிதம் அனுப்பப்படவேண்டிய முகவரி:

I. ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்: .................................................

II. சிங்களத்தில்/தமிழில் : .................................................................

06. I. நிரந்தர முகவரி:.........................................................................................
..................................................................................

II. மாவட்டம் :.........................................................................................

07. பால்: [ ]

ஆண் - 0

பெண் - 1

(இயைபான இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

08. செல்லிடத்தொலைபேசி இல. :......................................

09. தேசிய அடையாள அட்டை இல: | | | | | | | | | | |

10. இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடவும்:

ஆம் - 1 [ ]

இல்லை - 2

(இயைபான இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

11. பிறந்த திகதி:

ஆண்டு: | | | | | மாதம் : | | | திகதி : | | |

12. 2023, ஒகத்து 25 இல் உள்ளவாறான வயது :

ஆண்டு:.............. மாதங்கள்: ................. நாட்கள்:.................

13. I. உயர்தொழில்சார் மற்றும் வேறு தகைமைகள்: ....................................... ..........................................
......................................................

II. இரண்டாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்சத் தகைமை: ..................................................................

III. முதலாவது மொழியில் பெறப்பட்ட அதியுச்சத்தகைமை:.............................

(க.பொ.த உயர்தரம் / சாதாரண தரம்) அதியுச்ச தகைமைகளாகவிருப்பின், (க.பொ.த. (உயர் தரத்தின் / சாதாரண தரத்தின்) பரீட்சையாண்டுகளும் பெறப்பட்ட தரங்களும் (திறமைச் சித்தி / விசேட சித்தி) குறிப்பிடப்படுதல் வேண்டும்).

IV. (அ) பட்டத் தகைமைகள்:

| பட்டம் | பாடங்கள் | தரம் | ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

(ஆ) பட்டப்பின் தகைமைகள்:

| பட்டப்பின் பட்டம் | பட்டம் வழங்கப்பட்ட ஆண்டு | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |
| | | |

V. சட்டத்தரணி என்ற உயர்தொழிலில் பெற்ற அனுபவம்:

(சேவைக் கடிதமொன்று இணைக்கப்படுதல் வேண்டும்.)

14. I. ஏதேனும் தவறுக்காக நீர் சட்ட நீதிமன்றமொன்றில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா?
ஆம்/இல்லை.
ஆம் எனில், விளக்கவும்: .......................................................

II. பரீட்சைக் கட்டணம்:...................
பற்றுச்சீட்டு இல:........................
கொடுப்பனவுத் திகதி:................
கட்டணம் செலுத்தப்பட்ட வங்கி மற்றும் கிளை:..............................

| பற்றுச்சீட்டை இங்கு தகுந்தமுறையில் ஒட்டவும் |
|---|

15. **பரீட்சார்த்தியின் சான்றுப்படுத்துகை**:

(அ) மேலே கொடுத்துதவப்பட்ட விபரங்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன் / வாக்குறுதியளிக்கின்றேன்.

(ஆ) என்னால் அளிக்கப்பட்ட கூற்று பொய்யானதென அல்லது செம்மையற்றதெனத் தெரிவுக்குமுன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் தகைமையற்றவராக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும், நியமனத்துக்குப்பின்னர் அளிக்கப்பட்ட கூற்று பொய்யானதென அல்லது செம்மையற்றதெனத் கண்டுபிடிக்கப்படின், இயைபான நடவடிக்கைமுறைகளுக்கமைய நட்டஈடின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நான் ஆளாவேன் என்றும் அறிந்துள்ளேன். மேலும், நான் பரீட்சைகள் நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட விதிகளுக்குட்பட்டவர் என்றும் இயைபான பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவின் மீது பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

....................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்

திகதி:...........................

16. I. கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகை:

இவ்விண்ணப்பத்தைச் செய்கின்ற திரு./திருமதி./செல்வி............................என்பவரை (முழுப்பெயர்) நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர்/அவள் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் 2023.... ஆம் ஆண்டு...... ஆந்திகதியன்று இட்டார் என்றும் அவர் / அவள் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி இயைபான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

....................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர்:...........................;
பதவி:.......................................................;
முகவரி:.............................................................;
திகதி:.....................
(அலுவலகமுறையான முத்திரையை இங்கு இடவும்)

II. ***திணைக்களத் தலைவரின் சான்றிதழ்***

(அரசாங்க நிறுவனமொன்றில் சேவையாற்றுகின்ற விண்ணப்பகாரர்களுக்கு மாத்திரம்).

மேலே விண்ணப்பகாரரினால் கொடுத்துதவப்பட்ட விபரங்கள் என்னால் செவ்வைபார்க்கப்பட்டுள்ளனவென்றும் சொல்லப்பட்ட விபரங்கள் செம்மையானவையென்றும் அவரது செயல்நிறைவேற்றுகை, வருகை மற்றும் நடத்தை திருப்திகரமான மட்டத்தில் உள்ளனவென்றும் சான்றுப்படுத்துகின்றேன். இவ்வலுவலர் தெரிவுசெய்யப்படின், அவரை தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்கப்படமுடியும் / விடுவிக்கப்படமுடியாது.

....................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பதவிப்பெயர்:................................

திகதி:...................................

(அலுவலகமுறையான முத்திரையை இடவும்.

07-406

---

## இலங்கைப் பாராளுமன்றம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடம் நிலவும் பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பங்களை கல்வி/ தொழில் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023, ஓகத்து மாதம் 11ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.)

***குறிப்பு***: விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பப் படிவத்தில்உள்ள இடைவெளியில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. **பணிப்பாளர் (தொடர்பாடல்)**

1.1 **சம்பள அளவுத்திட்டம்**.-

2016.11.07 ஆந் திகதிய 2016/06 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ.67,485-4×1,630-8×2,170- ரூபா 91,365 (ஏனைய பிற மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 142,000) ஆகும்.

1.2 **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று30 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(அரசாங்க/மாகாண அரசாங்க/பாராளுமன்ற சேவையில் ஏற்கனவே நிரந்தரமாக்கப்பட்டுள்ள நபர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

1.3 **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**:-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து அல்லது பட்டத்தை வழங்கும் ஒரு நிறுவனத்திலிருந்து வெகுசன தொடர்பாடல் அல்லது சந்தைப்படுத்தல் தொடர்பான ஏதாவதொரு விடயத்தில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் ; மற்றும்

சந்தைப்படுத்தல்/வெளிக்களத் தொடர்பு/தொடர்பாடல் மற்றும் ஊடகம்/மனித வளமுகாமைத்துவம் தொடர்பாக குறைந்தது ஐந்து வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது பட்டத்தை வழங்கும் ஒரு நிறுவனத்திலிருந்து வியாபாரம் முகாமைத்துவம் (சந்தைப்படுத்தல்)/வியாபார நிர்வாகம்/ சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (விஷேட)/ கலை (தொடர்பாடல்/ வெகுசன தொடர்பாடல்/பொது உறவு/ஊடக முகாமைத்துவம்/தொடர்பாடல் மற்றும் ஆக்கபூர்வ கலை/விருந்தோம்பல் மற்றும் பொழுதுபோக்கு முகாமைத் துவம்/ ஊடகவியல் தொடர்பான ஏதாவதொரு விடயத்தில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல், மற்றும்

சந்தைப்படுத்தல் /வெளிக்களத் தொடர்பு/ தொடர்பாடல் மற்றும் ஊடகம்/ மனித வள முகாமைத்துவம் தொடர்பாக பத்து வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

இ) விண்ணப்பதாரர் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் 04 பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) ஒரே அமர்வில்/ 03 பாடங்களில் (புதிய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் உரிய மொழிக்கு (சிங்களம்/தமிழ்) திறமைச்சித்தியுடன் கணிதப் பாடத்திற்கு சாதாரண சித்தி அடங்கலாக 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

சந்தைப்படுத்தல்/வெளிக்களத் தொடர்பு/தொடர்பாடல் மற்றும் ஊடகம்/மனித வள முகாமைத்துவம் தொடர்பாக இருபது வருட தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

1.4 **ஆட்சேர்ப்பு முறை:-**

விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

1.5 **ஏனைய நன்மைகள்:-**

சாரதியுடனான ஒரு உத்தியோகபூர்வ வாகனம்.

2. **ஊடக அலுவலக ஒருங்கிணைப்பாளர் (சிங்களம்)**

**ஊடக அலுவலக ஒருங்கிணைப்பாளர்(தமிழ்)**

**ஊடக அலுவலக ஒருங்கிணைப்பாளர் ) ஆங்கிலம்)**

2.1 **சம்பள அளவுத்திட்டம்** :-

2016.11.07 ஆம் திகதிய 2016/06 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 32,330-3×380-10×445-4×660- ரூபா 40,560.00 (ஏனைய பிற மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 75,000) ஆகும்.

2.2 **வயதெல்லை**:- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று25 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.3 **கல்வித் தகைமைகள்:-**

விண்ணப்பதாரர் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் 04 பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) ஒரே அமர்வில்/03 பாடங்களில் (புதிய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த.(சா./த.) பரீட்சையில், விண்ணப்பிக்கப்படும் மொழிக்கு (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) திறமைச்சித்தியுடன் கணிதப் பாடத்திற்கு சாதாரண சித்தி அடங்கலாக 06 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

**குறிப்பு**: பொருத்தமான மொழி சிங்களமாக/தமிழாக இருந்தால், ஆங்கிலப் பாடத்திற்கு சாதாரண சித்தி அவசியமாகும். உரிய மொழி ஆங்கிலமாக இருந்தால், சிங்கள/தமிழ் பாடத்திற்கு சாதாரண சித்தி அவசியமாகும்.

2.4. **தொழில் தகைமை**:-

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தினால் வழங்கப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத் தயாரிப்பு தொழில்நுட்பம்/தொலைக்காட்சிப் பின்-தயாரிப்புத் தொழில்நுட்பம்/ கணினி கிராபிக் வடிவமைப்பு/ புகைப்படவியல்/காணொளிவியல் /காணொளிப் பதிப்பு/ஊடகம்/ஊடகவியல் தொடர்பான ஏதாவது ஒரு விடயத்தில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றிருத்தல்.

2.5. **அனுபவம்**:-

வெளிவாரி-மேலே காணப்படும் 2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு துறையில்/பிரிவில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

உள்வாரி- பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் ஐந்து வருட கால திருப்திகரமான சேவை.

2.6 **ஆட்சேர்ப்பு முறை**:-

விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **பொது வெளிக்கள அலுவலக ஒருங்கிணைப்பாளர்(ஆங்கிலம்)**

3.1 **சம்பள அளவுத்திட்டம்**:-

2016.11.07 ஆம் ஆம் திகதிய 2016/06ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 32,330-3×380-10×445-4×660- ரூபா 40,560.00 (ஏனைய பிற மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 75,000.00) ஆகும்.

3.2 **வயதெல்லை**:- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.3 **கல்வித் தகைமைகள்**:-

விண்ணப்பதாரர் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் 04 பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) ஒரே அமர்வில்/03 பாடங்களில் (புதிய பாடத்திட்டம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (சா./ த.) பரீட்சையில், விண்ணப்பிக்கப்படும் மொழிக்கு (சிங்களம்/ தமிழ்) திறமைச்சித்தியுடன் கணிதப் பாடத்திற்கு சாதாரண சித்தி அடங்கலாக 06 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

3.4. **தொழில் தகைமை**:-

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தினால் வழங்கப்படும் பொதுமக்கள் உறவுகள்/ தொடர்பாடல்/மனித வள முகாமைத்துவம்/கணினி கிராபிக் வடிவமைப்பு/புகைப்படவிடயல்/ஊடகவியல்/சுற்றுலா/ நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான ஏதாவதொரு விடயத்தில் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றிருத்தல்.

3.5 **அனுபவம்**:-

வெளிவாரி- மேலே காணப்படும் 3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு துறையில்/பிரிவில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

உள்வாரி- பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் ஐந்து வருட கால திருப்திகரமான சேவை.

3.6 **ஆட்சேர்ப்பு முறை**:- விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

4. **வரவேற்பு உத்தியோகத்தர்**

4.1. **சம்பள அளவுத்திட்டம்**:- 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 30,350-11×330-10×380- ரூபா 37,780.00 (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 72,000.00)ஆகும்.

4.2. **வயதெல்லை**:- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி அலுவலர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

4.3. **கல்வித் தகைமைகள்**:-க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ், கணிதம்மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஐந்து திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

4.4. **தொழில் தகைமைகள்**:- அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தினால் வழங்கப்படும் ஒரு வருடத்திற்கு குறையாத ஆங்கில டிப்ளோமா சான்றிதழை பெற்றிருத்தல்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் கணினி அறிவு தொடர்பான பாடநெறி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

- சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மற்றும் ஏதேனும் வெளிநாட்டு மொழிகளிலும் கதைக்கும் திறன் விஷேட தகைமையாக கருதப்படும்.

4.5. **அனுபவம்**:- அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் வரவேற்பு உத்தியோகத்தர் பதவியில்/ நுகர்வோர் சேவை உத்தியோகத்தர் பதவியில் ஆகக்குறைந்தது 01 வருட அனுபவத்தை பெற்றிருத்தல்.

**விதிவிலக்கு**:

**10 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை கொண்டுள்ள பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் A, B மற்றும் C ஆகிய சம்பள தொகுதியினுள் வரும் உத்தியோகத்தர்கள் மேற்குறித்த 4.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.**

4.6. **ஆட்சேர்ப்பு முறை**:- விண்ணப்பதாரர்கள் எழுத்துமூல பரீட்சை/பேச்சு மொழி பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

5. **பயிற்சி பெற்ற தொழிலாளர் (சிவில்) பதவி**

5.1. **சம்பள அளவுத்திட்டம்**: 2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 25,520-9×270-10×330-6×330- ரூபா 32,930.00 (சகல மேலதிகக் கொடுப்பனவுகள் அடங்கலாக இந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூபா 63,000.00 ஆகும்).

5.2. **வயதெல்லை:** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5.3. **கல்வித் தகைமைகள்:** சிங்களம் அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

***(குறிப்பு:** நிர்மாணத் துறை பற்றிய NVQ III மட்டத்தில் ஒரு சான்றிதழ் இருக்குமாயின், மேற்குறித்தவாறு க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என்பது அவசியமில்லை)*

5.4. **தொழில் தகைமை:-** தொழில் பயிற்சி அதிகார சபையால் (VTA)/ தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் (NAITA) அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு அரசாங்க நிறுவனத்தால் வழங்கப்பட்ட நிர்மாண விடயத்தில் (சிவில்) NVQ III மட்டத்திலான சான்றிதழை பெற்றிருத்தல்.

5.5. **அனுபவம்:-** அரசாங்க சேவையில்/அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் நிர்மாண விடயப் பிரிவில் (சிவில்) 03 வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5.6. **ஆட்சேர்ப்பு முறை:-** விண்ணப்பதாரர்கள் எழுத்து/செயன்முறை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

6. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்:**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. இந்தப் பதவிகளுக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். உள்வாரி விண்ணப்பதாரர் அல்லது ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள்/ தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

7. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

8. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்க கூட்டுத் தாபனங்களில் /நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

9. இப் பதவியை பெற்றுக் கொள்வதற்காக ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இப் பதவிக்கான தகைமையீனமாக கருதப்படும்.

10. விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு விபரம் பொய்யானது என ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் அவர் தகுதியற்றவராவார் என குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

11. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்க பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள /நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2023, யூலை 26.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

........................................................ பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..............................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்): ..............................................................................
..............................................................................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (திரு./திருமதி/செல்வி): ..............................................
..............................................................................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி:.......................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி: .......................................................................................................................
..............................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | |

(இ) தயவுசெய்து பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பி வைக்க வேண்டிய முகவரியை குறிப்பிடுக.

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி: ............................................

(பிறப்புச் சான்றிதழின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது: வருடங்கள்: ........ மாதங்கள்: ........ நாட்கள்: ...

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா: (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால்நிலை: (ஆண்/பெண்)

07. இலங்கைப் பிரசையா: (ஆம்/இல்லை)

08. கல்வி மற்றும் உயர் கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

09. தொழில் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்):

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

10. ஏனைய தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்):

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்):

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும்: ..........................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி: ..........................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி: ..........................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்: ..........................................................................................................

(உ) கொடுப்பனவுகள்: ..........................................................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம்: ..........................................................................................................

13. ஒரு நீதிமன்றத்தில் ஒரு குற்றவியல் குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை)
ஆம் எனில், விபரங்களை குறிப்பிடுக:

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

14. இதற்கு முன்னர் நீங்கள் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம்/இல்லை)

ஆம் எனில், விபரங்களை குறிப்பிடுக:

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர்

கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடுகள் ஏதுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

..............................................................
திகதி:.................. விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில் ........................................................................................................................................ பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................................................................................................ அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் எனவும், இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும் இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் /விடுவிக்கப்பட மாட்டார் (தயவுசெய்து பொருத்த மற்ற சொற்களை நீக்கிவிடவும்).

..........................................................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

திகதி:.....................

07-407